DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 41/2023**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | டாக்டர்.தினேஷ்பாபு | Caste: | |
| Father's Name: | ராஜேந்திரன் | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 37 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 14.11.2025

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை. 355 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

<u>**முதன்மை விசாரணை**</u>

நான் தற்போது பரமக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.06.2023ம் தேதி பரமக்குடி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது உரப்புளி முனியாண்டிபுரத்தை சேர்ந்த இராமகிருஷ்ணன் மகன் பாலமுருகன் என்ற 28 வயது மதிக்கத்தக்க நபர் தன்னை ஒரு இனம் தெரியாத ஒரு நபர் தாக்கியதாக அன்று மாலை 5.40மணியளவில் கிருஷ்ணா தியேட்டர் அருகே வைத்து தாக்கியதாக கூறி சிகிச்சைக்காக மாலை 6.05 மணியளவில் சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதிக்கையில் அவருக்கு இடது பக்கவாட்டு தலை பகுதியில் 4x2x1 செ.மீ அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது. அதே இடது பக்கவாட்டு தலை பகுதியில் 1வது காயத்தை சுற்றி வீக்கம் காணப்பட்டது. அதனால் அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு

தலையில் ஸ்கேன் எடுத்து பார்த்ததில் மென்மையான திசு காயம் மற்றும் இடது பக்கவாட்டில் இரத்தக்கசிவு காணப்பட்டது. அவர் 04.06.2023ம் தேதி சிகிச்சசையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.7**. 74 செ.மீ நீளமுள்ள ரீப்பர் கட்டை கொண்டு தாக்கினால் மேற்சொன்ன நபருக்கு ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

என்னிடம் சிகிச்சைக்கு சேரும்போது காயம்பட்ட நபர் தனக்கு ஏற்பட்ட காயம் கிருஷ்ணா தியேட்டர் அருகில் வைத்து ஏற்பட்டதாகத்தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட இரண்டு காயங்களும் பைக்கில் இருந்து கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)